# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்:378/பேரூ/2025**
**நாள் : 13.02.2026**

A. ராஜேஷ்,
ஆற்றூர்,
கன்னியாகுமரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆற்றூர் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். – எதிர் மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், ஆற்றூர் அஞ்சல், பறம்புவிளை என்ற முகவரியைச் சேர்ந்த திரு. A. ராஜேஷ் என்பவரது 16.10.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.10.2025 அன்று பெறப்பட்டு, 378/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கன்னியாகுமரி மாவட்டம், ஆற்றூர் அஞ்சல், பறம்புவிளை என்ற முகவரியை சேர்ந்த திரு. A. ராஜேஷ் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 16.10.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

01.09.2025 அன்று முதல்வரின் முகவரி இணையதளத்தில் புகார் மனு எண். 1474865 என்ற எண்ணில் மனு அளித்திருந்தேன். இதற்கான பதில் ஆற்றூர் பேரூராட்சி அலுவலகம் ந.க. எண். 248/2025/அ1, தேதி 12.09.2025 எனும் குறிப்பாணையின் அடிப்படையில் வழங்கப்பட்டது. அந்தப் பதிலில், அலுவலகம் தெரிவித்துள்ளது மேற்படி பணியாளர் கவனக்குறைவாக, தவறுதலாக இணையதளத்தில் என்னுடைய தகவலை பதிவேற்றம் செய்துள்ளார். மேலும், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் நான் தாக்கல் செய்த ந.க. எண். 264/2025/அ1 என்ற RTI மனுவுக்கான பதிலிலும், ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் கணினி இயக்குபவர் திருமதி. தோ. உஷா அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டதாகவும், அந்த விளக்கத்தின் அடிப்படையில் பதில் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே நேரம், அந்த கணினி இயக்குபவர் குலசேகரம் பேரூராட்சிக்குட்பட்ட S.R.K.P.V. மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற "ஸ்டாலின் முகாம்" நிகழ்வில் கலந்துகொண்டு, அங்கு பல மனுக்களை இணையத்தில்

பதிவேற்றும் பணியில் இருந்த போது, என்னுடைய மனு விவரங்களை வேறொரு நபரின் மனுவில் தவறாக இணைத்து பதிவேற்றியுள்ளார். இதனால் மனுவின் சாரம்சங்கள், பெயர், முகவரி போன்ற தனிப்பட்ட தகவல்கள் அறியாத மூன்றாம் நபர்களிடம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இச்செயல், இந்திய அரசியலமைப்பின் அனுச்சேதம் 21 – தனியுரிமையை நேரடியாக மீறுகிறது. இதன் விளைவாக, எனக்கும், எனது குடும்பத்தினருக்கும் பாதுகாப்பு மற்றும் தனிமனித உரிமை மீறல் ஏற்பட்டுள்ளது. ஆகவே விசாரித்து நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

<u>கோரிக்கை</u>

மனுதாரராகிய நான் தாழ்மையுடன் பின்வருமாறு கோருகிறேன்.

1. மனுதாரரின் தனிப்பட்ட தகவல்கள் தவறுதலாக இணையதளத்தில் பதிவேற்றப்பட்ட சம்பவம் குறித்த விரிவான விசாரணை மேற்கொள்ளவும்.
2. இச்சம்பவத்திற்குப் பொறுப்பான அப்போதைய செயல் அலுவலர் திருமதி. வினிதா மற்றும் கணினி இயக்குபவர் திருமதி. தோ. உஷா ஆகியோர் மீது ஒழுங்கு / தண்டனை நடவடிக்கை எடுக்க ஆணையிடவும்.
3. இதுபோன்ற தனிப்பட்ட தகவல் கசிவு மீண்டும் ஏற்படாமல் இருக்க, அனைத்து பேரூராட்சி அலுவலகங்களுக்கும் தகவல் பாதுகாப்பு மற்றும் தனியுரிமை வழிமுறைகள் குறித்த அரசாணை வெளியிட ஆணையிடவும்.
4. மனுதாரருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எதிர்காலத்தில் இதனால் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால், அதற்கான முழுப்பொறுப்பு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் மீதே என அறிவிக்கவும்' என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 19.11.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆற்றூர் பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. ஆற்றூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 10.12.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 248/2025/அ1-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், ஆற்றூர் பேரூராட்சியில் திரு. அ. ராஜேஷ், பறம்புவிளை, ஆற்றூர் அஞ்சல் என்பவரால் முதல்வரின் முகவரி மனு எண். 1474865 நாள் 01.09.2025-ன்படி முதல்வரின் முகவரியில் புகார் மனு அளித்துள்ளார். அம்மனுவில் முதல்வரின் முகவரி இணையதளத்தில் அப்பகுதியை சார்ந்த திரு. சோழராஜன் என்பவரால் குத்துவிளக்கு ஏற்றப்பட்டது தொடர்பான விவரம் கேட்டிருந்தார். மனுதாரருக்கு இணையதளம் வாயிலாக 12.09.2025 நாளிட்ட பேரூராட்சி அலுவலக கடித ந.க. எண். 248/2025/அ1-ல் பதிவு தபால் வாயிலாக சரியான பதிலறிக்கை மனுதாரருக்கு அனுப்பப்பட்டது. அன்னாருக்கு இணையதளம் வாயிலாக அனுப்பப்பட்ட பதிலறிக்கை பதிவேற்றம் செய்யும்போது கணினி இயக்குபவர் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பணிபுரியும் போது பணி நிமித்தம் தவறுதலாக அனுப்பப்பட்டதே தவிர வேறு காரணம் எதுவும் இல்லை. மேலும் சரியான தகவல் அனுப்பப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் இதுபோன்ற தவறுகள் ஏற்படாது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான ஆற்றூர் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 08.01.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.12.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. A. ராஜேஷ் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 08.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- என்னால் 01.09.2025 அன்று "முதல்வரின் முகவரி" இணையதளம் மூலமாக புகார் மனு எண். 1474865-ல் ஆற்றூர் பகுதியை சார்ந்த திரு. ச. சோழராஜன் என்பவர் கலந்துகொண்ட ஒரு நிகழ்வு குறித்து புகாராக அளிக்கப்பட்டதில், இணையதளம் மூலம் பதில் வழங்கப்பட்டது. மணல் திருட்டு தொடர்பாக வேறு ஒருவர் (திரு. அப்புக்குட்டன்) சமர்ப்பித்த மனுவிற்கு பேரூராட்சியால் பதில் அளிக்கும்போது நான் புகாராக தெரிவித்த திரு. ச. சோழராஜன் மீதான குற்றச்சாட்டு குறித்தான பதிலை எனது பெயர், முகவரி மற்றும் மனுவின் சாரா அம்சங்கள் சேர்த்து இணையதளத்தில் ஆற்றூர் பேரூராட்சி, செயல் அலுவலரால் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து திரு. அப்புக்குட்டன் என்பவர் வாட்ஸ் அப் செயலி மூலம் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார். இதனால் எனக்கும் மற்றும் எனது குடும்பத்தினருக்கும் பாதுகாப்பின்றி, மனித உரிமை மீறல் ஏற்பட்டுள்ளது என்பதால் இதற்கு காரணமான உரிய அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். " என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான ஆற்றூர் பேரூராட்சி செயல் அலுவலர் 08.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- ஆற்றூர் பகுதியை சார்ந்த திரு. சோழராஜன் என்பவர் குத்துவிளக்கு ஏற்றப்பட்டது தொடர்பான விவரம் கோரும் மனுதாரர் திரு. ராஜேஷ் என்பவரின் 01.09.2025 நாளிட்ட முதல்வரின் முகவரி மனுவிற்கு (மனு எண். 1474865) உரிய பதிலறிக்கை பேரூராட்சியால் 12.09.2025 நாளிட்ட கடிதம் பதிவு தபால் மூலம் மனுதாரர் A. ராஜேஷ் என்பவருக்கு சரியான பதில்அனுப்பப்பட்டது.
- ஆனால் மேற்படி பதிலறிக்கை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும்போது கணினி இயக்குபவரால் மனுதாரர் திரு. A. ராஜேஷ் என்பவரின் மனுவின் பதிலினை தவறுதலாக மணல் திருட்டு தொடர்பான வேறொருவரின் அதாவது திரு. அப்புக்குட்டன் என்பவர் சமர்ப்பித்த மனுவிற்கு பதிலாக தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்டது. இது குறித்து மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டது.
- கணினி இயக்குபவர் திருமதி. உஷா தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்டதற்கு பேரூராட்சியால் கணினி இயக்குபவருக்கு விளக்கக் கோரும் குறிப்பாணை வழங்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- இதுபோன்ற தவறுகள் இனி வருங்காலத்தில் ஏற்படாது என இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

7. மனுதாரர் திரு. A. ராஜேஷ் என்பவரின் புகார்மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான ஆற்றூர் செயல் அலுவலரின் அறிக்கைகள் மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. A. ராஜேஷ் என்பவர் 01.09.2025 அன்று முதல்வரின் முகவரி இணையதளத்தில் புகார் மனு அளித்த நிலையில் அம்மனுவின் செயல்பாட்டின் போது ஆற்றூர் பேரூராட்சி செயல் அலுவலர் மனுதாரரான திரு. A. ராஜேஷ் என்பவரின் தனிப்பட்ட தகவல்களை வேறொருவரின் மனுவுடன் இணைத்து, இணையதளத்தில் பொதுமக்கள் பார்வைக்காக பதிவேற்றியதால் தனக்கு பாதுகாப்பு மற்றும் தனி மனித உரிமை மீறல் ஏற்பட்டுள்ளதாக புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் திரு. A. ராஜேஷ் என்பவரால் கன்னியாகுமரி மாவட்டம், ஆற்றூர் பகுதியை சார்ந்த திரு. சோழராஜன் என்பவரால் குத்துவிளக்கு ஏற்றப்பட்டது தொடர்பாக விபரம் கோரும் 01.09.2025 நாளிட்ட முதல்வரின் முகவரி மனுவிற்கு (மனு எண். 1474865) ஆற்றூர் பேரூராட்சி செயல் அலுவலரால் மனுதாரர் திரு. A. ராஜேஷ் என்பவரின் முகவரிக்கு தபால் மூலம் உரிய விவரங்கள் அளிக்கப்பட்டது என்பதையும், ஆனால் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும்போது மற்றொரு மனுதாரரான திரு. அப்புக்குட்டன் என்பவர் சமர்ப்பித்த மனுவிற்கு பதில் அளிப்பதற்கு பதிலாக முறையீட்டு மனுதாரர் திரு. ராஜேஷ் என்பவரின் பெயர், முகவரி மற்றும் மனுவின் சாரம்சங்களுடன் கூடிய விவரங்களை கவனக்குறைவாக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது என்பதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

இவ்வாறு தவறுதலாக இணையதளத்தில் பதிவேற்றம் செய்த கணினி இயக்குபவர் திருமதி. உஷா என்பவரிடம் விளக்கம் கோரப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகாராக தெரிவிக்கும் மனுக்களுக்கு உரிய தகவல்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும்போது கவனத்துடன் செயல்படாமல், பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டுள்ள கணினி இயக்குபவரான திருமதி. உஷா என்பவர் மீது விளக்கம் பெற்று உரிய தொடர் நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ளுமாறும், இதுபோன்ற நிகழ்வுகள் இனி வருங்காலங்களில் நடைபெறா வண்ணம், பொறுப்புடனும் கவனத்துடனும் நடந்துகொள்ள வேண்டும் என ஆற்றூர் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. A. ராஜேஷ்,
பறம்புவிளை, ஆற்றூர் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629 177

2) செயல் அலுவலர்,
ஆற்றூர் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–**600 028.**

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–**600 028.**

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/2/26
செயலாளர்
13/2/26